பக்கங்கள்:-19
காலை முரசு
முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 22 | வியாழக்கிழமை | 07.08.2025 | அதிர்வு 06

## அநுர - தமிழ் எம்.பிக்கள் இன்று அவசர சந்திப்பு

(ந.லோகதயாளன்)



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்15பேரின் எழுத்து மூல மான அவசர வேண்டு 07





# செம்மணியில் நேற்றும் 6 மனித எலும்புக்கூடுகள்

- இதுவரை 147 என்புத் தொகுதிகள் அடையாளம்
- அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்
- ஸ்கான் ஆய்வு அறிக்கை 14ஆம் திகதி நீதிமன்றுக்கு
- அடுத்த கட்ட அகழ்வுப் பணிகள் 22ஆம் திகதி ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதை குழியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அகழ்வின் போது புதிதாக 6 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள் ளன. 06

# காலில் செருப்புடன் எலும்புக்கூடு ஒன்று மீட்பு!





(பிரபாகரன் டிலக்சன்)

செம்மணி மனிதப் புதைகுழியில் காலில் செருப்புடன் மனித என்புத் தொகுதி ஒன்று நேற்றுமுன்தினம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப் பட்ட மனிதப் புதைகுழியில் 06




நேற்று ஒரு நண்பரை ஒரு குடும்ப நிகழ்வில் சந்தித்தேன். பேச்சு அரசியல் பக்கம் திரும்பியது.

அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் அல்லர். எனினும் தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலையை அவர் வரவேற்கும் பாணியில் சிலாகித்துப் பேசினார். என்ன என்று சற்று அவதானித்தேன்.

“தமிழரசுக் கட்சி முன்னர் காட்டாற்று வெள்ளம் போல அணையே இல்லாமல் தன் இஷ்டப்படி கண்டபடி ஓடியது. இப்போது ஒழுங்காக இயங்குகிறது” என்றார் அவர்.

எனக்கு விளங்கவில்லை – அவர் எதைக் கூற வருகின்றார் என்பது. எனக்கு விடயம் பிடிபடவில்லை என்பதைப் புரிந்து கொண்டு அவரே விளக்கினார்.

“மாவை, சம்பந்தன் போன்றோரின் கட்டுப்பாட்டில் கட்சி இருந்த போது – கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக அவர்கள் இருந்த சமயத்தில் கூட – கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னும் அவர்களால் 06









# இலங்கையை வந்தடைந்தார் ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில் ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் நேற்று புதன்கிழமை மாலை மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்தார்.

சமந்தா ஜோய் மோஸ்டின் உள்ளிட்ட குழுவினரை வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும், இரு நாடுகளின் பரஸ்பர பயன்தரும் தற்போதுள்ள ஒத்துழைப்புத் துறைகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்படும்.

சமந்தா ஜோய் மோஸ்டின் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் பண்டாரகம, மிரிஸ்ஸ மற்றும் வெலிகம போன்ற பகுதிகளில் ஆஸ்திரேலியாவின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் பல திட்டங்களைக் கண்காணிக்கவும் உள்ளார்.







# செம்மணிப் புதைகுழி விசாரணை; அரசால் எவ்வித இடையூறும் இல்லை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு




"யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்கு அரசு எவ்வித இடையூறும் ஏற்படுத்த வில்லை. மாறாக தேவையான ஒத்துழைப்புகளே வழங் கப்பட்டு வருகின்றன." –

– இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் நீதிமன்றக் கண்காணிப்புடன் இடம்பெற்று வருகின்றன. தேவையான வசதிகளை அரசு செய்து கொடுத்துள்ளது.

வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கே அதிக வாக்குகள் உள்ளன. நிச்சயம் நாம் நீதியை நிலைநாட்டுவோம்.

தெற்கில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனினும், இதனை எப்படியாவது மீள ஏற்படுத்துவதற்கு ராஜபக்ஷக்கள் முற்படுகின்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைக்கு நாம் எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கூட ஒத்துழைப்பு கோரியுள்ளோம்." – என்றார்.

# மின்சாரம் திருத்தச் சட்டமூலம் சபையில் 96 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

## ஆதரவாக 121 வாக்குகள்; எதிராக 25 வாக்குகள்



இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்ட மூலம் 96 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

நேற்று மு.ப. 11.30 மணி முதல் பி.ப. 5 மணி வரை இலங்கை மின்சாரம் (திருத் தச்) சட்டமூலம் தொடர்பான இரண்டா வது மதிப்பீட்டு விவாதம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு இடம் பெற்றது. இதில், சட்டமூலத்துக்கு ஆதரவாக 121 வாக்குகள் பதிவாகியது டன், இதற்கு எதிராக 25 வாக்குகளும் பதி வாகின.

இதனைத் தொடர்ந்து குழு நிலை யில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு மூன்றாவது மதிப்பீட்டுத் திருத்தங் களுடன் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற் றப்பட்டது. இதற்கு அமைய இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் 96 மேல திக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

# கோப் குழுவின் தலைவர் அரவிந்த இராஜிநாமா!



## பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க இணக்கம் ஏற்பட்டுள்ளதால் முடிவு

அரசாங்கக் கணக்குகள் பற் றிய குழுவின் தலைவர் பதவியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பி னர் அரவிந்த செனரத் இராஜிநாமா செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவிசேட உரை ஒன்றை ஆற்றிய போதே அவர் தனது இராஜிநாமாவை அறிவித்தார்.

அரசாங்கக் கணக்குகள் குழு வின் தலைவர் பதவியை எதிர்க்கட் சிக்கு வழங்க இணக்கம் ஏற்பட்டுள்ள தால் அதற்கு வழிவகுக்கும் வகை யில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் குறிப்பிட்டார்

# தமிழ், முஸ்லிம் தலைமைகள் ஒரே மேசையில் அமர்ந்தால் உள்ளக முரண்பாடு முடிவுறும்

## ரிஷாத் எம்.பி. நம்பிக்கை




தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உள்ளக முரண்பாடுகளை ஒரே மேசையில் பேச்சு நடத்தி தீர்க்க முடியும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா கொண்டு வந்த ஓட்டமாவடி எல்லைப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பான பிரேரணையில் உரையாற்றியபோதே ரிஷாத் பதியுதீன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விவாதத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தீர்வு காண முடியாது. எந்த அரசாங்கமானாலும் எமது சமூகங்களின் பிரச்சினைகளைத் தூண்டிவிட முயற்சிக்குமே தவிர, தீர்த்து வைக்க முயற்சிக்காது. கடந்தகால அனுபவங்களூடாக நாங்கள் புரிந்து வைத்துள்ள உண்மையே இது.

ஓட்டமாவடி பிரதேச சபையை எமது கட்சியே வென்றிருந்தது. எனினும், எங்களை ஆட்சியமைக்க விடாமல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்துள்ளன. இந்த விடயத்தில் ஏற்பட்ட புரிந்துணர்வு போன்று ஏனைய காணிப் பிரச்சினை மற்றும் கல்விப் பிரச்சினைகளில் ஏன் இவர்களால் ஒன்றுபட முடியாது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்,முஸ்லிம் சமூங்களின் அக முரண்பாடுகளைப் பேசித் தீர்க்க முடியும். கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தையும் இழுத்தடிக்க வேண்டியதில்லை. சமூகத் தலைமைகள் இணைந்தால் இதையும் இலகுவாகத் தீர்க்கலாம்.

தனிநாடு, சமஷ்டி கோரிப் போராடிய தமிழ்த் தலைமைகள் முஸ்லிம்களின் உள்ளக விடயங்களைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்ட சிறுபான்மை சமூகங்களின் எந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டதாக வரலாறுகள் இல்லை.

எனவே, நமது உள்ளகப் பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்வோம். தமிழ், முஸ்லிம் தலைமைகள் ஒரே மேசையில் அமர்ந்தால், எல்லா உள்ளக முரண்பாடுகளுக்கும் முடிவு கிடைக்கும்.” – என்றார்.

# மண் மேடு சரிந்து 6 பேர் புதையுண்டனர்

## மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி



**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள ராணி தோட்டத்தில் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் வீடமைக்க தளம் வெட்டிக் கொண்டிருந்த வேளையில் திடீரென மண் மேடு சரிந்ததால் 6 பேர் புதையுண்டனர்.

சம்பவத்தையடுத்து மஸ்கெலியா பிரதேச சபை பணியாளர்களுடன் பிரதேசவாசிகள் புதையுண்ட 6 பேரையும் காப்பாற்ற நடவடிக்கை எடுத்தனர்.

சரிந்த மண் மேடு அகற்றப்பட்டு 6 பேரும் அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் யதுர்ஷன் (வயது 28), யோகேஸ்வரன் (வயது 45), இராஜேஸ்வரன் (வயது 38), விஜயலிங்கம் (வயது 45), விஜயகுமார் (வயது 43), ஆறுமுகம் (வயது 45) ஆகிய 6 பேரும் சிறு சிறு காயங்களுடன் உயிர் தப்பியிருந்தனர்.

மஸ்கெலியா பொலிஸார், ராணி தோட்ட தொழிலாளர்கள் இணைந்து இவர்களது உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்திருந்தனர்.

மஸ்கெலியா பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உள்ளிட்டோரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

# தேசபந்துவைப் பதவி நீக்குகின்ற கடிதத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல்



தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கும் கடிதத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒப்புதல் அளித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்கம் செய்வது தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இந்தக் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

அதற்கமைய தேசபந்து தென்னக்கோனைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார்.

அரசமைப்பு சபை பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஜனாதிபதி ஒருவரைப் பரிந்துரைத்ததைத் தொடர்ந்து, பெரும்பான்மை ஒப்புதலின் அடிப்படையில் புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படுவார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒழுங்காகக் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியவில்லை. ஜெனிவாவுக்குக் கடிதம் என்றதும் அந்தச் சமயத்தில் தத்தம் பாட்டில் எல்லாம் எம்.பிக்கள் நடந்து கொண்டனர். எல்லாத் தமிழ் எம்.பிக்கள் சார்பிலும் சம்பந்தன் தனித்து ஜெனிவாக் கடிதத்தில் கையெழுத்து வைத்து விட்டார் என்ற கோபத்திலோ, எண்ணத்திலோ – தங்களின் கையெழுத்துகள் தங்கள் பெயர் குறிப்பிட்டுப் பெறப்படவில்லை என்ற விசனத்தில் – பிற தரப்புகள் ஜெனிவாவுக்கு எழுதிய கடிதங்களில் எல்லாம் தமிழ் எம்.பிக்கள் – சிவஞானம் சிறிதரன் உட்பட – கையெழுத்திட்டு அனுப்பியமை பற்றிய தகிடுதத்தங்கள் குறித்து நீங்களே பல தடவைகள் செய்திகள் வெளியிட்டு இருக்கிறீர்கள். ஆனால் இப்போது கட்சியின் தலைவரும் எம்.பியில்லை, செயலாளரும் எம்.பியில்லை. ஆயினும் கஜேந்திரகுமார் தரப்பு கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுக் கொண்டும் கூட தமிழரசு எம்.பிக்கள் எவரும் அந்தக் கடிதத்தில் கையெழுத்து வைக்கவில்லை. கட்சிக் கட்டுப்பாடு என்று விட்டார்கள். ஏன் தெரியுமா?" – என்று வினா தொடுத்தார் அந்த நண்பர்.

வழமையாக இது போன்ற உரையாடல்களில் முந்திரிக்கொட்டை போல முந்திக்கொண்டு பதில் சொல்லும் நான், நேற்று அவரின் பதிலுக்கு மௌனமாகக் காத்திருந்தேன்.

"இப்போது அப்படி நடந்தால் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை விரைந்து பாயும், இதற்காக எங்கு என்று சந்தர்ப்பத்திற்கு காத்திருக்கிறார்கள் என்ற உண்மை – யதார்த்த நிலைமை – எம்.பிகளுக்கும் நன்கு தெரியும்." என்று விளக்கினார் அந்த நண்பர்.

உண்மைதான். பலதரப்புகளும் சந்தர்ப்பத்துக்குக் காத்திருக்கின்றன என்ற யதார்த்தம் எம்.பிக்களுக்கும் புரியும். ஆனாலும் இந்த உறுதி நிலை தொடர்வதற்கு அண்மைக் காலத்தில் – தேர்தல்களை ஒட்டி – கட்சிப் பிரமுகர்கள் நடந்து கொண்ட போக்குக்காக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் தங்கு தடை இன்றித் தொடர வேண்டும். அவற்றை வெறுமனே பத்திரிகை, ஊடகங்கள் மூலமாக ஆரவார அறிவிப்பாக வெளியிடுவதுடன் அடங்கி விடுவதாக விடயம் இருக்கக் கூடாது. தொடர் நடவடிக்கைகள் அவசியம். ஏற்கனவே பலரிடம் ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. அப்படியே விவகாரத்தைப் பொத்தெண்டு போட்டு விட்டுப் பார்த்திராமல், தொடர்ந்து மத்திய குழுவைக் கூட்டி, அந்த விளக்கங்கள், வியாக்கியானங்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை கட்சி முன்னெடுக்க வேண்டும்.

அப்படி நடந்தால் தான், கடந்த 15 ஆண்டு காலமாக கட்சியை ஒழுக்கக் கட்டுப்பாட்டில் இல்லாமல் அவிழ்த்து விட்டமையால் ஏற்பட்ட நிலைமையில் இருந்து மாற்றி அமைத்து, தமிழரசு ஒரு கட்டுக்கோப்பான கட்சியாக மீண்டெழ முடியும்.

சி.வி.கே. – சுமந்திரன் இணை அதனைச் செய்யுமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்...!

\+ \+ \+

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நான்கு இந்தியர்களை நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தி இருந்தார்கள். அவர்கள் நால்வரையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் அப்போது உத்தரவிட்டிருந்தார்.

அவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் இருந்தபோது பிடிபட்டவர்கள் அல்லர் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள கச்சதீவில் தரை இறங்கி, மறைந்திருந்த சமயமே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது தற்போது தெரியவந்திருக்கின்றது.

கச்சதீவில் கடற்படையினரைக் கண்டதும் தப்பியோட முயன்ற இந்த 4 இந்தியர்களையும் கைது செய்த கடற்படையினர், அவர்களை நெடுந்தீவிற்கு அழைத்து வந்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

அவர்கள் கச்சதீவு வரைப் பயணித்த படகில் மீன்பிடி வலைகளோ அல்லது மீனோ காணப்படாதமை வேறு சந்தேகங்களைத் தந்திருப்பதாக இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இனி, விசாரணையில்தான் உண்மை துலங்கும் என்கின்றனர் அதிகார மட்டத்தினர்.



## சாகல ரத்நாயக்க வாக்குமூலம் பதிவு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிக்குழாம் பிரதானியாகக் கடமையாற்றிய சாகல ரத்நாயக்க குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

சட்டவிரோதமாக சொத்துக்களை ஈட்டியதாகக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் இடம்பெற்று வரும் விசாரணைகளுக்காக அவர் நேற்று முற்பகல் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜரானார்.

அவரிடம் 06 மணித்தியாலங்களுக்கும் அதிகமான காலம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

## காலில் செருப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து இரண்டு கால்களிலும் செருப்பு அணிந்த நிலையிலும், இடுப்பில் கட்டும் தாயத்துடனும் மனித என்புத் தொகுதி ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வின் 32ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது 6 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 10 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 147 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளில் இருந்து 140 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுடன் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றையதினம்ஸ்கான் ஆய்வு அறிக்கை மற்றும் மண் பரிசோதனை அறிக்கை என்பவை சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, அடுத்த கட்ட அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி மீள ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.







# வேலைவாய்ப்புகளுக்கு சென்ற 4794 இலங்கையர் உயிரிழப்பு

கடந்த 14 வருடங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்ற 4794 இலங்கையர் பல்வேறு காரணங்களால் உயிரிழந்துள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதில் 3179 ஆண்களும் 1615 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்றவர்களில் அதிகமானோர் இயற்கை மரணம் எய்தியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த காலப்பகுதியில் 3242 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கைத்தொழில் மற்றும் நீரில் மூழ்குதல் போன்ற விபத்துகளால் 428 பேரும், வீதி விபத்துக்களால் 446 பேரும் உயிரிழந்துள்ளதுடன், 377 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 61 இலங்கையர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் அதிகமானோர் கொழும்பு, காலி, கம்பஹா, கண்டி, களுத்துறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அநுர - தமிழ்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோலின் பெயரில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா இன்று அவசரமாகச் சந்திக்கின்றார்.

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படும் காற்றாலை மின் கோபுரங்கள் தொடர்பில் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதம் தொடர்பில் ஆராயவே இந்த அவசர சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று மதியம் 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்த அவசர சந்திப்புக்குக் கடிதத்தில் ஒப்பமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கடித்ததில் ஒப்பமிடாத வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்கு மன்னார் காற்றாலையுடன் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.



Mobile 0777760795
Fax 023-2222100

PARLIAMENT

Selvam Adaikkalanathan,M.P
Member of Parliament –Vanni District

Bishop Rayappu Joseph Road
No.23,
Pettah,
Mannar.
05.08.2025

His Excellency the President
Democratic Socialist Republic of Sri Lanka
Colombo

Your Excellency,

**Urgent Request for a Meeting Regarding the Ongoing Windmill Project in Mannar**

We, the undersigned elected Members of Parliament, write to urgently seek an appointment with Your Excellency concerning the ongoing windmill projects being implemented in Mannar Island.


As political representatives of the affected region, and in unanimous decision in the District Coordinating Committee (DCC), we have collectively decided to oppose the continuation of these large-scale wind power projects. This decision is driven by multiple serious concerns, including:

- Severe environmental degradation
- Destruction of livelihoods, particularly in the fisheries, home gardening, and agriculture sectors
- Increased incidents of flooding, now posing a growing and unsustainable threat to the residents of Mannar

While we initially did not oppose the 100 MW *Thambapavani* wind farm, our experience with the project has been deeply concerning. The issues have primarily stemmed from poor planning and decision making, as well as a lack of sensitivity and consultation by key officials. This has significantly erode[d] public trust and created an untenable situation on the ground.

Despite repeatedly raising these issues with officials from the Ceylon Electricity Board (CEB), the Sri Lanka Sustainable Energy Authority (SEA), the Hon. Minister of Power and Energy, and other relevant stakeholders, our concerns have been met with indifference. Notably, the former Chairman of the CEB and senior officials at SEA were directly approached, yet no meaningful action has been taken. The Government Agent of Mannar officially requested a one-month suspension (Ref: MN/GA/PL/D04/WP/2022, dated 22.01.2025) to allow for stakeholder dialogue, which was **complete[ly] ignored** by the relevant authorities. No stakeholder consultation or meeting has been held to date.

At present, Mannar is in a state of civil emergency. Normal life has been brought to a standstill—s[...] remain closed, and large-scale public demonstrations and picketing continue unabated.



Office 023-2222100
Mobile 0777760795
Fax 023-2222100

PARLIAMENT

Selvam Adaikkalanathan,M.P
Member of Parliament –Vanni District

We respectfully request **Your Excellency to grant us an urgent meeting** to discuss this matter and identify a path forward in the best interest of the environment, local communities, and national development.

We thank Your Excellency for your attention and look forward to a favourable response.

Yours sincerely,

**Honourable Members of Parliament**

1. Hon. Sivagnanam Sritharan, M.P.
2. Hon. Gagenthirakumar Ponnambalam, M.P
3. Hon. Rishad Bathiudeen, M.P.
4. Hon. Kader Masthan, M.P.
5. Hon. A. Adaikkalanathan, M.P.
6. Hon.Shanakiyan Rajaputhiran Irasamanikam, M.P.
7. Hon. Ariyanayakam Kaveenthiran Kodishuvaran, M.P.
8. Hon. Pathmanathan Sathiyalingam, M.P.
9. Hon. Dr. Archuna Ramanathan, M.P.
10. Hon. Kathiravelu Sanmugam Kugathasan, M.P.
11. Hon. Gnanamuthu Srineshan, M.P.
12. Hon. Ilaiyathambi Srinath,M.P.
13. Hon. Thurairasa Ravikaran, MP
14 Hon · UDUMALEBBA MP
15 A Ismail Muthu Mohamed



# வெப்ப நிலை தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்

வடமத்திய, கிழக்கு மாகாணங்கள் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டியதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற் குறித்த மாவட்டங்களின் சில பகுதிகளில், மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை எச்சரிக்கை நிலையில் இருப்பதாகவும், இது உடல்நலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்ப குறியீடு என்பது வெப்ப நிலையும், ஈரப்பதத்தையும் இணைத்து மனித உடலுக்கு உணவாகும் வெப்பத்தை கணிப்பதற்கான அளவாகும். இது வெவ்வேறு இடங்களில் வெப்பம் எப்படி தாக்கம் செய்யும் என்பதை நன்கு விளக்குகிறது.

இது வெவ்வேறு நேரங்களில் உண்மையான வெப்பநிலை இல்லாமல், உடலில் உணரப்படும் வெப்பம் என்பதையும் குறிப்பிடுகின்றனர்.

அதனால், மக்கள் பாதுகாப்பாக இருக்க, அதிக நேரம் வெளியில் தங்காமல், நீர் உட்கொள்ளும் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

# இடமாற்றப் பிரச்சினைக்கு தீர்வில்லையேல் நாடு தழுவிய அளவில் பணிப்புறக்கணிப்பு

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவர்களின் இடமாற்றப் பட்டியல் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட தமது கோரிக்கைகள் சுகாதார அமைச்சினால் தீர்க்கப்படாவிடடால், நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பை ஆரம்பிக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 11 ஆம் திகதி காலை 8 மணிக்குள் திருப்திகரமான தீர்வுகள் வழங்கப்படாவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தொழிற்சங்கம் முடிவு செய்துள்ளதாக, சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் ஹன்சமல் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சுடன் தொடர்ந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்ட போதும் இடமாற்றப் பட்டியலில் உள்ள சிக்கல்கள் குறித்து எந்த அர்த்தமுள்ள தலையீடும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது சங்கம் எழுப்பிய கவலைகளைச் சுகாதார அதிகாரிகள் புறக்கணிப்பதாகவும் தொழிற்சங்கத்தின் மத்தியக் குழு பணிப்புறக்கணிப்பை கடைசி முயற்சியாக ஒருமனதாக முடிவு செய்துள்ளதாகவும் வலியுறுத்தினார்.

எதிர்வரும் நாள்களில் தீர்வு எட்டப்படாவிட்டால், முன்மொழியப்பட்ட பணிப்புறக்கணிப்பு நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளைப் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நாட்டில் 1,408 மருத்துவர்களை நியமிக்கும் சுகாதார அமைச்சு

ஆரம்ப தர மருத்துவ அதிகாரிகளாக பயிற்சிகளை நிறைவுசெய்த 1,408 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்க சுகாதார அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

2024ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பயிற்சியை முடித்த, உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்த மருத்துவர்கள், அமைச்சின் மனிதவள முகாமைத்துவ மற்றும் தகவல் அமைப்பு ஊடாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்) II மருத்துவர் எச்.எம். அர்ஜுன திலகரத்ன அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்போடு செயல்படுக!

தாம் இரண்டாவது தடவையாக அமெரிக்காவினுடைய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து பண்ணும் சண்டப் பிரசண்டம் உலகம் தாங்க முடியாததாக இருக்கின்றது.

பொருளாதார ரீதியான நடவடிக்கை என்ற பெயரில் மாறி மாறிக் கண் மூடித்தனமாக, தமது நாட்டுக்கான வெளிநாடுகளின் ஏற்றுமதிகளின் மீது வரி விதித்து வரும் அமெரிக்க அதிபரின் நடவடிக்கை, சர்வதேசரீதியில் பொருளாதாரப் பதற்றத்தையும் தாண்டி, ஒரு பெரும் உலக மகா யுத்தத்துக்கான சூழ்நிலையை உருவாக்கி வருவதாக அவதானிகள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

பொருளாதார வரி விதிப்புகளையும் இராணுவ ரீதியான சச்சரவுகள் மற்றும் முரண்பாடுகளையும் தொடர்பு படுத்தி அவர் எடுக்கும் முடிவுகள் பல சர்வதேச நாடுகளை அமெரிக்கத் தரப்பிலிருந்து தள்ளி வைக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன.

அவரது உடனடி அயல் தேசமான கனடாவில் தொடங்கி, பல நேட்டோ நாடுகள் அமெரிக்காவிலிருந்து விலகிப் போகின்ற போக்கு வெளிப்படையாகத் தென்படுகின்றது.

ரஷ்யாவுடன் முரண்பட்டு நிற்கும் அமெரிக்க அதிபர், அதன் காரணமாக ரஷ்யாவோடு வர்த்தகத் தொடர்பாடல்களை வைத்திருக்கும் இந்தியா போன்ற நாடுகளோடும் பொருளாதார யுத்தத்தை திறந்து இருக்கின்றார். அது இராணுவ ரீதியான அழுத்தமாக மாறக்கூடிய ஆபத்து ஏது நிலைகள் தென்படுகின்றன.

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு 25 சதவீத வரி என்று முன்னர் அறிவித்த அமெரிக்க அதிபர் நேற்றுடன் அதனை 50 வீதமாக உயர்த்தி இருக்கிறார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை நியாயமற்றது என்று தெரிவித்துள்ள இந்தியா, அமெரிக்க முடிவு துரதிஷ்டவசமானது, இந்தியா தனது தேசிய நலன்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று அறிவித்துள்ளது.

இந்திய - அமெரிக்க முரண்பாட்டுக்கு மத்தியில் இந்தப் பிராந்திய நாடுகள் குறிப்பாக - இலங்கை போன்றவை - மிக அவதானமாகவும், பக்கச் சார்பின்றியும், எந்தத் தரப்பையும் பகைத்துக் கொள்ளாமலும், 'கத்தி மீது நடப்பது போல' செயல்பட வேண்டும்.

இலங்கை தனது பிராந்தியத்தில் உள்ள மற்றைய நாடுகளோடு போட்டி போட்டு அமெரிக்காவுக்கு ஏற்றுமதிகளைச் செய்கின்றது. இந்தப் பிராந்தியத்தில் உள்ள கம்போடியா, பிலிப்பின்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு 19 வீதமும், பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கு 20 வீதமும் அமெரிக்கா வரி விதித்திருக்கின்றது.

அதேசமயம் இந்தப் பிராந்தியத்தில் மற்றொரு அயல் தேசமான இந்தியாவுக்கு இப்போது இந்த வரி விதிப்பு ஐம்பது வீதமாக உயர்ந்துள்ளது.

தனது பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளோடு போட்டியிட்டு அமெரிக்காவுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்யும் இலங்கை, இந்த விடயத்தில் இந்தியாவிலும் விட சாதகமான நிலையில் இருப்பது கண்கூடு.

ஆனால் இந்த சாதக நிலைமையைக் கையாள்வதில் இலங்கை மிக அவதானமாகவும், பொறுப்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். இந்தியாவுக்கு விதிக்கப்பட்ட வரி அதிகரிப்பை பயன்படுத்தி இலங்கை லாபமீட்டுகின்றது என்ற கசப்புணர்வு இந்தியாவுக்கு வராமல் இலங்கை செயல்பட வேண்டும்.

இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்ட சமயத்தில், அயல்தேசத்துக்கு முன்னுரிமை என்ற பெயரில், விரைந்து வந்து உதவிய உடனடி அயல் தேசமான இந்தியாவை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 'விழுந்த மாட்டில் குறி சுடுவது போல' இலங்கை கையாளாமல், பொறுப்போடு செயலாற்ற வேண்டும்.

# ஜெனிவாவுக்குச் சொல்ல வேண்டிய செய்தியை சரியான முறைமையில் தமிழரசுக் கட்சி சொல்லும்

## கிளிநொச்சியில் வைத்து சுமந்திரன் தெரிவிப்பு

தமிழ் மக்கள் மீதான இனவன்முறைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு சொல்ல வேண்டிய செய்தியை நாங்கள் சரியான விதத்தில் சொல்லுவோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணிமான எம்.ஏம் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்ட விடயத்தினை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –


இலங்கை நாடாளுமன்றத்தினால் பதவியில் இருந்த தேசபந்து தென்னக்கோனை பதவி விலக்குகின்ற பரிந்துரை செய்யும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அதிகாரிகளை பதவியிலிருந்து விலக்குகின்ற சட்டம் முதன் முதலில் பாவிக்கப்பட்டிருக்கின்றது.

இது 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் – அதாவது அரசமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டதன் பின்பு – அந்த அரசமைப்பு பேரவையினால் பதவியில் அமர்த்தப்படும் இரண்டு அதிகாரிகளான சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் இவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்கான வழிமுறை ஒன்று இச்சட்டத்திலே கொடுக்கப்பட்டுள்ளது.

இருபது வருடங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்த இந்த சட்டம் முதன் முறையாக நடைமுறைக்கு வந்துள்ளது. ஆகவே இது ஒரு முக்கியமான விடயம். சுயாதீனமான இந்த பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் வேறு விதமாக பதவி நீக்கப்பட முடியாது.

இந்த பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது ஒருவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. அரசாங்கம் – எதிர்க் கட்சி என்ற பிரிவினை இல்லாமல் வாக்களிக்கப்பட்டுள்ளது என்பது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.



குறிப்பாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பதவி நீக்கும்போது நாடாளுமன்றம் இரண்டாகப் பிரிந்தது. அந்தப் பதவி நீக்க பிரேரணையானது தவறான முறையில் நிறைவேற்றப் பட்டிருந்தது.

ஆட்சி மாற்றத்தின் பின் தவறான பிரேரணை என்ற அடிப்படையில் அவர் மீளவும் பதவியில் அமர்த்தபட்டார்.

இம்முறை சுயாதீன பதவியில் உள்ள ஒருவர் எதேச்சதிகாரமாக பதவி நீக்கப் படாமல், விசாரணைக் குழு அறிக்கையை வைத்து, அதனை நாடாளுமன்றத்தில் விவாதித்து, மிகப்பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. – என்றார்.

இதேவேளை தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஐ.நா. மனித உரி–மைகள் கவுன்ஸிலுக்கு கடிதம் ஒன்றை அனுப்பவுள்ள நிலையில் அக்கடிதத்தில் தமிழரசுக்கட்சி கையொப்பமிடுமா என்பது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்:–

அந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் என்பதல்ல, அந்த கடிதம் எதற்காக செய்யப்படுகின்றது என்று விமர்சனங்களை முன் வைத்திருக்கின்றார்கள்.

கையொப்பமிடாத தரப்புகள் எல்லாம் தங்களுடைய பெயர்களை அதிலே இணைத்து விட்டார்கள் என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்கள்.

தமிழரசுக் கட்சியை பொறுத்த வரையில் அதனோடு ஈடுபடாமல் இருப்பது பொருத்தமானது என்று நாங்கள் கருதுகின்றோம்.

எங்களுடைய கூட்டத் தீர்மானத்தின் படி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலுக்கு நாங்கள் சொல்லுகின்ற செய்தி சரியான முறையில் தெரிவிப்போம். உரிய நேரத்திலே அதனை செய்வோம் என்ற முடிவை எடுத்திருக்கின்றோம்.

தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலே தமிழரசு கட்சி தவறான நிலைப்பாடுகளை கொண்டிருக்காமல் பொதுவான நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோம்.

செம்மணியில் அகழ்ந்தெடுக்கப் படுகின்ற மனித என்புத் தொகுதிகள் மற்றும் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன வன்முறைகள் போர் குற்றங்கள் தொடர்பில் நாங்கள் சர்வதேச பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறி சர்வதேச ஈடுபாட்டை நாங்கள் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். – என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவால் வடக்கில் முதல் தடவையாகக் காணி உறுதிகள் வழங்கல்

(ந.லோகதயாளன்)

காணிச் சீர் திருத்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டு 53 ஆண்டுகளின் பின்பு வடக்கில் முதன் முதலாக பொது மக்களுக்கு வழங்கப்பட்ட காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவின் காணிகளிற்கு உறுதி வழங்கப்டவுள்ளது.

1972 ஆம் ஆண்டு காணிச் சீர் திருத்த ஆணைக்குழு உருவாக்கப் பட்டதன் பின்பு ஆணைக்குழுவின் ஆளுகையில் உள்ள நிலங்களில் குடியிருக்கும் மக்களிற்கு ஏனைய மாகாணங்களில் உறுதி வழங்கப் பட்டபோதும், வடக்கு மாகாணத்தில் 50 ஆண்டு காலமாக குடியிருக்கும் மக்களிற்கு இதுவரை உறுதி வழங்குவதில் தடைகள் காணப்பட்டன. அந்தத் தடைகளை நிவர்த்தி செய்து, முதல் தடவையாக 342 பேருக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி பச்சிலைப்பள்ளியில் உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த 342 உறுதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் 300 உறுதிகளும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 42 உறுதிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்தக் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் கமத்தொழில், காலைநடைகள் மற்றும் காணி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள், வடக்கு மாகாண ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்குகொள்ளவுள்ளனர். 13 ஆம் திகதி வழங்கப்படும் உறுதிகளிற்கு மேலதிகமாக கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டத்தில் தலா ஆயிரம் உறுதிகளும், வவுனியாவில் 250 உறுதிகளும் எதிர் வரும் 3 மாதங்களிற்குள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக காணிச் சீர் திருத்த ஆணைக் குழுவின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் தெரிவித்தார்.




# அரசே ஓர் இனத்துக்கு எதிராக இருக்கும் போது நீதி அந்த அரசுக் கட்டுமானங்கள் ஊடாகக் கிடைக்காது

## தேசபந்து பற்றிய விவாதத்தில் கஜேந்திரகுமார் விளக்கம்

ஓர் அரசே ஓர் இனத்துக்கு எதிராக இருக்கின்ற பொழுது அந்த இனத்துக்கு நீதி அந்த அரசுக் கட்டுமானங்கள் ஊடாக கிடைக்காது என்பதை இன்றைக்காவது ஏற்றுக்கொண்டு நடந்து கொள்ள வேண்டும்.

– இவ்வாறு அரசுத் தரப்பைப் பார்த்து நேற்று நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்கும் பிரேரணை மீதான நாடாராளுமன்ற விவாதம் நெற்று முன்தினம் நடைபெற்ற போது அதில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அந்த உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

தேசபந்து தென்னகோன் ஓர் அரசியல் முகவர். அவருடைய காலம் முழுதும் அவர் அரசியல்வாதிகளுக்கு முகவர்களாக செயல்பட்டமைதான் அவருடைய வரலாறு. அந்த வகையிலே அவர் தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் அனைத்துமே ஓர் அரசியல் பின்னோக்கத்தோடு அணுகப்பட வேண்டும் என்பதை இந்த நாடாளுமன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்து தரப்புகளும் – அவரை தங்களுடைய முகவராக பயன்படுத்தின தரப்பை தவிர – அனைத்துத் தரப்புகளும் அதை ஏற்றுக் கொள்வார்கள் என நான் நினைக்கிறேன்.

ஆனால் இந்த தேசபந்து தென்னகோன் என்ற நபர் மட்டும்தான் அவ்வகையான அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு கலாச்சாரத்திலே மாட்டுப்பட்டவர் என்று எவரும் சொல்ல முடியாது. இந்த அரசாங்கமே முன்வைக்கின்ற பிரதான குற்றச்சாட்டு அதுதான். தங்களுடைய ஆட்சி போன வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு முன்பதாக கிட்டத்தட்ட 76 வருடங்களாக – பிரித்தானியர் இந்த தீவை விட்டு வெளியேறிய நாளில் இருந்து – ஆட்சியில இருந்த அனைத்து தரப்புகளும் தங்களுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி, அரசு உத்தியோகத்தர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து, அவர்களைத் தங்களுடைய அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தி, ஒட்டுமொத்த அரசு இயந்திரமே அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு நிலையிலே இருப்பதாக இந்த அரசாங்கம் பல தடவைகள் – கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் குற்றஞ்சாட்டிக்கொண்டு வருகின்றது. அது உண்மை. அதிலே மாற்று கருத்து இல்லை. ஆனால் இந்த அரசாங்கமும் உண்மையிலே அரசு உத்தியோகர்த்தர்கள் அரசியல் மயப்படுத்தப்பட்ட நிலையிலே சேவை செய்யக்கூடாது என்ற ஒரு நிலைப்பாட்டிலே இல்லை என்பதை சுட்டி காட்டவிரும்புகின்றேன்.

ஆட்சிக்கு வரக்கூடிய அனைத்து அரசாங்கங்களும்ஓர்அரசினுடையகொள்கையாக, ஒரு குறிப்பிட்ட ஒரு தரப்பை குறிவைக்கின்ற பொழுது – அது ஒரு அரசினுடைய கொள்கையாக இந்த நாட்டிலே வாழக்கூடிய ஒரு இனத்தை குறிவைத்து அவர்களுக்கு எதிராக வேலை செய்கின்ற பொழுது – அதற்கு என்ன பரிகாரம்? அதுக்கு என்ன பதில்?

தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே பொலிஸ் சேவையில இருக்கின்றவர்களும், இராணுவத்தில் இருக்கின்றவர்களும் படு மோசமாக குறிவைக்கப்படுகிறார்.ந்துதான் எங்களுடைய வரலாறு.

தேசபந்து தென்னக்கோன் தென் அரசியலிலே ஓர் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு நபர் என்ற வகையிலே இன்றைக்கு உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிற இடத்திலே நீங்கள் அவரைக் குறி வைக்கிறீர்கள். ஆனால் அவரை மட்டும் குறிவைப்பதாலே நீங்கள் இந்த நாட்டினுடைய அடிப்படை புற்றுநோயாக இருக்கக்கூடிய அனைத்து விவகாரங்களிலும் அரசியல் தலையீடுகள் இருக்கின்ற அந்த புற்றுநோயை நீங்கள் நீக்க போவதில்லை. அப்படி நீங்கள் நீக்குவதற்க்கு முயற்சித்தாலும் கூட தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சனைகள், தமிழ் மக்கள் இன்றைக்கு சந்திக்கின்ற அநீதிகளுக்கு நீங்கள் ஒருபோதிலும் எங்களுக்கு அந்த நீதியைக் கொடுக்க போகின்றவர்கள் இல்லை. ஏனென்றால் நீங்களும் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு செயல்படுகின்ற ஒரு தரப்பாக இருக்கிறீர்கள்.

இன்றைக்கு செம்மணியினுடைய அகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 130 உடல்களுக்கு மேலாக இதுவரைக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நீதவான் ஒரு கட்டளையிட்டுருக்கின்றார். அங்கு கண்டுபிடிக்கப்பட்ட சான்றுப்பொருள்கள் பொது மக்களுக்கு முன்னால் நிறுத்தி அந்த பொதுமக்கள் அதை அடையாளப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த விவாதம் நடைபெறுகின்ற பொழுது செம்மணியிலே பொதுமக்களை அழைத்து அதிலே காட்சி அளிக்கப்படுகின்ற விஷயங்களை அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்ற இந்த நிமிஷத்திலே

தொடர்ச்சி ▼

# அரசே ஓர் இனத்துக்கு எதிராக இருக்கும் போது நீதி அந்த அரசுக் கட்டுமானங்கள் ஊடாகக் கிடைக்காது

தொடர்ச்சி ▲

நீதி அமைச்சினுடைய செயலாளர் அங்கே வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய இந்த அகழ்வு செயல்பாடுகளை ஈடுபட்டு கொண்டு இருக்கிறவர்களோடு நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். சிஐடியினுடைய ஏ.எஸ்.பி. யாழ்பாணத்திலே இன்றைக்கு இந்த அகழ்வுகள் கண்காணிப்புக்கு விட்டிருக்கின்ற சந்தர்ப்பத்திலே பொது மக்கள் வந்து அடையாளப்படுத்துகின்ற வாசலில் இருக்கிறார். அவரும் அவருடன் இன்னும் ஒரு 10 பேர் சுற்றி வர வாசலில் இருக்கிறார்கள். இது தமிழ் மக்களை மிரட்டு கின்ற விளையாட்டு அல்லவா? இதை நீங்கள் செய்யலாம். இது தமிழனுக்கு நடக்கும் பொழுது இது அரசியல் தலையீடு அல்ல. அது எப்படி நியாயம்? ஆகவே தான் நான் கூறுகின்றேன். உங்களுக் கும் மற்றவர்களுக்கும் இடையிலே இனம் சார்ந்த விடயங்களிலே ஒரு வித்தியாசமும் கிடையாது.

நேற்று ஸ்ரீலங்காவிடைய மனித உரி மைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணம் சென்று செம்மணி அகழ்வு பிரதேசங் களைக் கண்காணித்து அவர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித் தார்கள். அவர்கள் உண்மையிலேயே சுயாதீனமான ஓர் அமைப்பாக இருந் தால், அவர்கள் இந்த நாட்டினு டைய அரசாங்கத்துக்கு சொல்ல வேண் டிய விஷயம் என்னவென்றால், இன் றைக்கு ரோம் சாசனத்தில் நீங்கள் கைச் சாத்திடவில்லை, ரோம் சாசனம் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட குற்றங்கள் இந்த நாட்டின் சட்டத்துறையில் குற்றங்களாக அறிமுகப்படுத்தப்படவில்லை, செம்மணி யில நடந்திருக்கின்ற அநியாயம் ரோம் சாசனத்தில் இருக்கக்கூடிய குற்றங்கள், இந்த நாட்டிலே அவை குற்றங்களாக அங்கீகரிக்கப்படாத நிலையிலே ஒரு சர்வதேச குற்றவியல் விசாரணை மட்டும் தான் நடந்த அநியாயத்துக்கு ஒரு நீதியை கொடுக்கும் என்ற அறிக்கையை தான் முன்வைக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் சொல்லாமல் அவர்கள் ஊடகங்களுக்கு புத்திமதி சொல்லு கிறார்கள். "தயவு செய்து நீங்கள் உணர்வு பூர்வமாக இந்த விஷயங்களை வெளிக் கொண்டு வராதீர்கள், உணர்ச்சி வசப்பட்டு கதைக்காதீர்கள், குழப்பாதீர்கள்!" என்ற கருத்தைத்தான் சொல்கிறார்கள். ஆகவே தான் நான் சொல்கிறேன் – ஓர் அரசே ஓர் இனத்துக்கு எதிராக இருக்கின்ற பொழுது அந்த இனத்துக்கு நீதி இந்த அரசு கட்டுமானங்கள் ஊடாக கிடைக் காது என்பதை இன்றைக்காவது, – 130 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுருக்கின்ற இன்றைக்காவது – நீங்கள் ஏற்றுக் கொண்டு நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின் றேன். – என்றார்.

# சம்பூரில் மனித எச்சங்கள் இருந்த காணியில் தொடர்ந்து அகழ்வு மேற்கொள்வதற்கு முடிவு

## மூதூர் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு

(எஸ்.கீதபொன்கலன்)



மனித எலும்பு எச்சங்கள் காணப்பட்ட சம்பூர் காணியில் மேலும் மனித எலும் புக்கூடுகள் மற்றும் எச்சங்கள் உள்ள னவா என்பதைக் கண்டறிய அகழ்வுகள், கிழக்குப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதியின் ஆலோசனையை பெற்று இராணுவ பாதுகாப்பு ஆளணியின் உதவியுடன் முறைப்படி நடத்தப்பட வேண்டும் என்று மூதூர் நீதிவான் திருமதி தஸ்னீம் பௌஸான் நேற்று உத்தரவிட்டார்.

மேலும் இவ்வழக்கு விசாரணையை எதிர்வரும் 26 ஆம் திகதி தொடர்ந்தும் நடத்துவது என்றும் நீதிமன்று தீர்மா னித்தது.

இதுவரை இங்கு கண்டெடுக்கப்பட்ட மூன்று எலும்புக்கூடுகளில் ஒன்று 25 வயதிற்கு குறைந்த ஆண் ஒருவரு டையது என்றும், மற்றையது 25 இற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவருடையது என்றும். அடுத்தது 40 இற்கும் 60 வய திற்கும் இடைப்பட்ட ஒருவருடையது என்றும் நேற்று வழக்கு தொடர்பான மகாநாட்டின் போது மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை முன்வைத் தார்.

இன்றைய வழக்கு மகாநாட்டில் தொடர்ந்து சட்டவைத்திய அதிகாரி கூறுகையில் –

இந்த இடம் மயானம் என்பதற்கு இதுவரை ஆதாரங்கள் முன்வைக்கப் படவில்லை. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த எச்சங்களுக்குரியவர்கள் இயற்கை யாக மரணம் அடைந்தார்களா அல்லது ஏதேனும் குற்றச்செயல்கள் மூலம் மரணம் நிகழ்ந்ததா என்பதைக் கண்டறிய மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். என்றார்.

இக்காணி அரச காணியாக உள்ள போதும், இங்கு ஒரு மயானம் இருந்ததற் குரிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று இம்மாநாட்டில் தொல்பொருள் திணைக் களம், பிரதேச செயலக செயலாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகி யோரால் அறிக்கை முன்வைக்கப்பட்டது. இந்த அறிக்கைகளை ஆராய்த பின்னரே நீதிமன்று அகழ்வு செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்துள்ளது.

இன்றைய வழக்கு மகாநாட்டில் மாவட்ட சட்டவைத்திய அதிகாரி. தொல்பொருள் திணைக்கள அதிகாரி, புவிசரிதவியல் துறை அதிகாரி. பொலிஸ் குற்றப் புல னாய்வுப் பிரிவினர், தேசிய கண்ணிவெடி அகற்றம் நிறுவனத்தினர். மெக் மிதி வெடி அகற்றும் நிறுவனத்தினர், பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், காணாமல் போனோர் தேசிய செயல கத்தின் சட்டத்தரணி, பிரதேச காணி உத்தியோகத்தர், பிரிவிற்கான கிராம சேவை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்ற ஜூலை 19 ஆம் திகதி மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இப்பகுதியில் நடந்தபோது. மனித மண்டையோடு, கால் எலும்பு என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனை அடுத்து 23 ஆம் திகதி சம்பவ இடத்தை மூதூர் நீதிவான் நேரில் பார்வையிட்டார். அதனை அடுத்து சென்ற 30 ஆம் திகதி விடயம் தொடர்பில் மூதூர் நீதிமன்றில் விசாரணைகள் நடை பெற்றன.

அன்றைய தினம் நீதிபதி விடுத்த அறிவிப்பின்படி நேற்று நீதிமன்ற கூட்டம் நீதிபதி தலைமையில் நடை பெறும் எனவும். இக் கூட்டத்தின் பின் னர் இந்த மனித எச்சங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் முடிவுசெய்யப்பட்டிருந்தது.



# மன்னார் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக திருகோணமலையில் நேற்று கவனவீர்ப்பு




**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் இல்மனைட் கனிய மணல் அகழ்விற்கு எதிராக மக்கள் எழுச்சி ‘கருநிலம்’ போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாக திருகோணமலையில் நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

திருகோணமலை பிரதான கடற் கரை முன்றிலில் இடம் பெற்ற இந்தக் கவன வீர்ப்பை தளம் சூழலியல் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதன் போது ‘நிலமிழந்தால் எங்கள் பலமிழபோம்’, ‘நீங்கள் அகழ்வது மணல் மட்டுமல்ல, எங்களது வாழ்க்கையை!’ என்பன உள்ளிட்ட பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் பலர் இணைந்து கவனவீர்ப்பை முன்னெடுத்தனர்.

# கல்முனையில் அமைதி வழிப் போராட்டம்!



**( காரைதீவு சகா)**

நிலையான அரசியல் தீர்வுக்கான நாகள் செயல்முனையின் 3 ஆவது வருடம் நிறைவினை முன்னிட்டு கல்முனை மாநகரில் நேற்றுப் புதன்கிழமை காலை அமைதி வழி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி இது மேற்கொள்ளப்பட்டது. இதன்போது மக்கள் பதாதைகளை ஏந்தி அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது நிலையான அரசியல் தீர்வுக்கான 100 நாள்கள் செயல்முனையின் 3 ஆவது வருடம் குறித்து வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் ஊடக வெளியீடு ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.



# தாந்தாமலையில் நாளை நள்ளிரவில் தீமிதிப்பு!

**( வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற அரசி ஆண்டசவுந்தரி ஆட்சி செய்த மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இறுதி நாள் தீமிதிப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை நள்ளிரவு நடைபெறவிருக்கிறது என ஆலயத் தலைவர் இ.தட்சணாமூர்த்தி நேற்றுத் தெரிவித்தார்.

உற்சவகால பிரதம குரு சிவஸ்ரீ ந.பத்மநிலோஜ ஈசானசிவம் குருக்கள் மற்றும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பு.நவரூபன் குருக்கள் தலைமையில் தினமும் பகல் இரவு பூஜைகளுடன் 21 நாள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

தினமும் ஆயிரக்கணக்கான அடியார்கள் அங்கு சென்று மலையேறி விநாயகரையும் வணங்கி திருவிழாவில் கலந்து கொண்டுவருகின்றனர். நீண்ட கடைத்தெரு அமைக்கப்பட்டுள்ளது. தினமும் அன்னதானம் தாராளமாக வழங்கப்படுகிறது.

இரவுத் திருவிழா நள்ளிரவு 12 மணி வரை நடைபெற்றுவருகிறது.

ஆலய புதிய பரிபாலன சபையின் தலைவர் இ.தட்சணாமூர்த்தி, செயலாளர் செ.சிறிதரன், பொருளாளர் தா.ஜெயராம் தலைமையிலான நிருவாக சபையினர் ஆலயத்தை அழகாக வடிவமைத்து பரிபாலனம் செய்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் எஸ்.கிரேஷ்குமாரன், களுதாவளை பிரதேச சபை தவிசாளர் வினோ, சொர்ணம் தொழிலதிபர் மு.விஸ்வநாதன், முன்னாள் தவிசாளர்களான சிவ.அகிலேஸ்வரன் (பட்டிப்பளை), கி.ஜெயசிறில்(காரைதீவு) உள்ளிட்ட பலர் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.

தினமும் கொக்கட்டிச்சோலை பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் எஸ்.கிரேஷ்குமாரன் பிரசன்னமாகி மக்கள் சார்ந்த நலன்புரி பணிகளை கண்காணித்து வருகின்றார்.

கடந்த 19 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இவ் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுநாள் 09 ஆம் தேதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆலய வளாகத்தில் உள்ள தீர்த்தக்கேணியில் தீர்த்தம் ஆடுவதுடன் நிறைவடையவுள்ளது.















## எதிர்க்கட்சிகள் அமளி;

# நாடாளுமன்ற இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரின் 13 ஆம் நாளான நேற்று, மக்களவை மற்றும் மாநிலங்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் வழக்கம்போல் காலை 11 மணிக்குக் கூடின. மக்களவை கூடியதும், ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவற்றின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசிய தன் 80 ஆம் ஆண்டை முன்னிட்டு, உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த சபாநாயகர் ஓம் பிர்லா கேட்டுக்கொண்டார். இதையடுத்து, அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து, பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். உறுப்பினர்களை அமைதி காக்குமாறு சபாநாயகர் தொடர்ந்து வலியுறுத்தினார். எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபட்டதால், முதலில் அவையை 12 மணி வரை ஒத்திவைத்தார். அவை 12 மணிக்குக் கூடியதும் மீண்டும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், அவை 2 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையை அதன் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் காலை 11 மணிக்குத் தொடங்கினார். மாநிலங்களவையின் முன்னாள் உறுப்பினரும் ஜம்மு காஷ்மீரின் முன்னாள் ஆளுநருமான சத்ய பால் மாலிக்கின் மறைவு குறித்து அவைக்கு அறிவித்த ஹரிவன்ஷ், ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தார்.

அதன்பிறகு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளை விதி எண் 267ன் கீழ் விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் விதி எண் 267க்கு பொருந்தாது என தெரிவித்த ஹரிவன்ஷ், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளை பூஜ்ஜிய நேரத்தில் எழுப்பலாம் என கூறினார். இதை ஏற்க எதிர்க்கட்சிகள் மறுத்து அமளியில் ஈடுபட்டன. இதனால், அவை ஒத்திவைக்கப்பட்டது.

# இந்திய விமான நிலையங்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு எச்சரிக்கை






இந்தியாவில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் அதிகபட்ச பாதுகாப்பு எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 22 முதல் ஒக்டோபர் 2 வரை தீவிரவாதிகள் அல்லது சமூக விரோதக் குழுக்களால் தாக்குதல் நடத்தப்படலாம் என மத்திய புலனாய்வுத் தரவுகள் எச்சரித்துள்ளன என கூறப்படுகிறது.

இந்த எச்சரிக்கையின் பின்னணியில், சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் பாதுகாப்பு பிரிவு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கக் கூறி அறிவுறுத்தல் வெளியிட்டுள்ளது.

அதன்படி, விமான நிலையங்கள், விமான ஓடுபாதைகள், ஹெலிபேட்கள், விமானபயிற்சிமையங்கள்என அனைத்து விமான தளங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அனைத்து விமான நிலையங்களிலும் 24 மணி நேர கண்காணிப்புடன் செயற்படவுள்ளன.

அதனுடன், பணியாளர்கள், ஒப்பந்த நிறுவன ஊழியர்கள் மற்றும் பார்வையாளர்களின் அடையாளச் சான்றுகள் கட்டாயமாக சரிபார்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விமான நிலைய வளாகம் முழுவதும் சி.சி.ரி.வி. கண்காணிப்பு தொடர்ச்சியாக செயல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தி, அனுமதியில்லாத நபர்களின் நுழைவை உடனடியாக தடுக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

அத்தோடு, உள்ளூர் மற்றும் சர்வதேச விமானங்களுக்கான சரக்கு மற்றும் அஞ்சல் பொருள்கள் மீது தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விமான நிலைய பணிப்பாளர்கள், அனைத்து சார்ந்த நிறுவனங்களும் நிலையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை செயல்படுத்துவதை உறுதிசெய்ய விமான பயணிகள் சேவை குழுக்களுடன் விசேட கூட்டங்களை நடத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் பிராந்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் பாதுகாப்பு பிரிவு பணிப்பாளர்கள், தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து விமான நிலையங்களிலும் உடனடி ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி நடவடிக்கைகள் கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# உத்தராகண்ட் மேகவெடிப்பு: இதுவரையில் 190 பேர் மீட்பு

## 100 இற்கு மேற்பட்டோரைத் தேடும் பணி தீவிரம்

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசியின் தரளி பகுதியில் மேகவெடிப்பால் ஏற்பட்ட நிலச்சரிவு - பெருவெள்ளத்தில் சிக்கி இதுவரை ஐந்து பேர் உயிரிழந்த நிலையில், 100 இற்கும் மேற்பட்டோரை தேடும் பணி தொடர்ந்து வருகிறது. இதுவரை 190 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசியில் உள்ள தரளியில் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகலில் மேகவெடிப்பு ஏற்பட்டது. இதனால் கீர் கங்கா நதியில் திடீரென பெருவெள்ளம் ஏற்பட்டு தரளி கிராமத்தை நோக்கி சீறிப் பாய்ந்தது. தரளியில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் இராணுவம், ஐ.டி.பி.பி, தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை ஆகியவை இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. தொடர் மழையால் மீட்புப் பணிகளில் தடைகள் ஏற்பட்டுள்ள நிலையில், 150 பேர் கொண்ட இராணுவக் குழு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

உத்தரகாசியில் மேக வெடிப்பு மற்றும் நிலச்சரிவு காரணமாக, பர்த்வாரி, லிஞ்சிகாட் மற்றும் கங்க்ராணி அருகே உள்ள முக்கிய வீதிகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால், வாகனப் போக்குவரத்து கடுமையாக பாதித்துள்ளது. தரளியில் உள்ள ஒரு சிவில் ஹெலிக்கொப்டர் தளமும் மண் சரிவு காரணமாக செயல்படவில்லை. சவாலான நிலப்பரப்பு மற்றும் வானிலை நிலைமைகளுக்கு ஏற்ப மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் மாநில அரசுக்கு உதவ உறுதியாக உள்ளோம் என்று இராணுவம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உத்தரகாசியில் மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்று வரும் நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் மாநிலத்தின் பல மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உத்தரகாசி, தெஹ்ரி, ருத்ரபிரயாக், சாமோலி, பித்தோராகர் மற்றும் பாகேஷ்வர் போன்ற மலைப்பாங்கான மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஓகஸ்ட் 10 ஆம் திகதி வரை மாநிலம் முழுவதும் மஞ்சள் எச்சரிக்கை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்ட் மேகவெடிப்பால் பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து சுமார் 190 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர் என அம்மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி தெரிவித்துள்ளார்.

உத்தரகாசியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட அவர், “தரளி முற்றிலும் பேரழிவின் பிடியில் சிக்கியுள்ளது. நான் அங்கு சென்று அனைத்து மக்களையும் சந்தித்தேன். மேகவெடிப்பால் ஏற்பட்ட வெள்ளம் தொடர்ந்து ஆறு முறை வந்தது என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். மண் சகதி மீண்டும் மீண்டும் வந்ததால், அங்குள்ள அனைத்தும் பேரழிவிற்கு உள்ளாயின.” என்று தெரிவித்தார்.



# இந்தியாவிற்கு மேலும் 25 வீத வரியை விதித்தார் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்



இந்தியாவிற்கு மேலும் 25 வீத வரியை விதிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தங்கள் நாட்டுடன் உலக நாடுகள் வரி விதிப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

ஜூலை இறுதி வரை காலக்கெடு நிர்ணயித்திருந்தார். இந்தக் காலக்கெடுவுக்குள் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால், அந்தந்த நாட்டில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு வரி விதிக்கப்படும் என வலியுறுத்திருந்தார்.

அமெரிக்கா- இந்தியா இடையில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படவில்லை. இதனால் 25 சதவீதம் வரி விதிக்கப்படுவதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

அத்துடன் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது எனவும் எச்சரித்தது. ஆனால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தவில்லை.

இதற்கிடையே, அடுத்த 24 மணி நேரத்தில் இந்திய பொருள்களுக்கு கணிசமாக வரி விதிக்கப்படும் என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தியா மீது மேலும் 25 சதவீதம் மேலதிகமாக வரி விதிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன்மூலம் இந்திய பொருள்களுக்கு 50 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது.



# வெள்ளை மாளிகையின் கூரையில் ஏறினார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையின் கூரை மீதேறி அங்கு மேற்கொள்ளவேண்டிய திருத்தப்பணிகளை பார்வையிட்டு அதற்குரிய உத்தரவுகளை வழங்கியுள்ளார்.

இதன்போது வெள்ளை மாளிகையின் கூரையில் ஒரு அசாதாரண இடத்திலிருந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதிலளித்தார்.

79 வயதான ட்ரம்ப் அங்கு அணு ஏவுகணைகளை உருவாக்குவதாக குறிப்பிட்டார். அவர் ஒரு ஏவுகணையைக் காட்டி ஒரு சைகையையும் செய்தார்.

செய்தியாளர் ஒருவர், 'ஐயா, நீங்கள் ஏன் கூரையில் ஏறுகிறீர்கள்?' என்று கேட்டபோது, ட்ரம்ப் 'கொஞ்சம் நடந்து செல்கிறேன்' என்று நையாண்டி செய்தார்.

வெள்ளை மாளிகையின் கூரையில் ஜனாதிபதி ட்ரம்ப் அமர்ந்திருக்கும் காணொலிகள் சமூக ஊடகங்களில் வைரலாகின.

அவர் வெள்ளை மாளிகையின் கூரையிலிருந்து பல சைகைகளைச் செய்தார், அவை சமூக ஊடகங்களில் விசித்திரமானது என்று அழைக்கப்படுகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 07.08.2025




இன்று கடினமான நாளாக இருக்கும். உங்கள் பொறுமை இழப்பீர்கள். பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்காது. உங்களின் சௌகரியங்களை இழக்க நேரும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் வீட்டின் புனரமைப்பிற்கான வகையில் கட்டாய பணச் செலவு செய்ய நேரும். உங்கள் செலவுகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலக் குறைபாடு ஒன்றிற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்று உற்சாகமான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக உங்கள் இயல் திறனை நிரூபித்துக் காட்டுவீர்கள். அர்ப்பணிப்புடன் பணி செய்து வெற்றி காண்பீர்கள்.

உங்களது கலகலப்பான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பண வரவு அதிகரித்து காணப்படும். தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக உங்கள் மன நிலையும் உடல் நிலையும் ஆரோக்கியமாக இருக்கும்.




இன்று சற்று மந்தமான உணர்வுகள் காணப்படும். அதனை தவிர்த்தல் நலம். இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். இதனால் ஆரோக்கியமான உறவு பராமரிக்கப்பட்டு நல்லுறவு மேம்படும்.

அதிக செலவினங்கள் காணப்படுகின்றது. பணம் இழக்காமலிருக்க சாதுர்யமாக திட்டமிட்டு செலவு செய்யுங்கள்.

உங்களுக்கு கண் எரிச்சல், முதுகுவலி மற்றும் கால் வலி ஏற்படலாம்.




இன்று அதிக பொறுப்பும் பதற்றமும் காணப்படும். விவேகமான, முறையான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாக பதட்ட உணர்வு ஏற்படலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் வீட்டின் சீரமைப்பிற்காகவும் புனர்நிர்மானத்துக்காகவும் பணம் செலவு எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சினைகளைக் கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று அனைத்து விதத்திலும் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மற்றும் உறுதி காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் சுறுசுறுப்பாக பணியாற்றுவீர்கள். குறைந்த நேரத்தில் விரைந்து பணிகளை ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு ஆரோக்கியமாக இருக்கும்.

இன்று பண வரவு காணப்படும். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும்.




உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

இன்று கடினமான வேலைகளையும் எளிதாக ஆற்ற முடியும். பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதன் காரணமாக உங்கள் துணை உங்களை நன்கு புரிந்துகொள்வார்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் லாபகரமானதாக இருக்கும் என்பதால் அதில் பங்கு கொள்ளலாம்.




நீங்கள் செய்த தவறுகளை இன்று சரி செய்ய வேண்டும். உங்கள் செயல்களை முறையாக ஏற்பாடு செய்து ஒரு கட்டுப்பாட்டோடு செய்யுங்கள்.

உங்கள் பணிகளை பொறுமையுடனும் உறுதியுடனும் ஆற்ற வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் பிரியமானவரின் வார்த்தைகள் உங்களை காயப்படுத்துவதாக உணர்ந்து சோர்வு கொள்வீர்கள். சகஜமாக அணுகுவது மகிழ்ச்சியான உறவுக்கு நல்லது.

இன்று செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். அதற்கு தகுந்தால் போல பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தேவையற்ற கவலைகள் மற்றும் தோல் எரிச்சல் காரணமாக நீங்கள் தூக்கத்தை இழப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.08.2025




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும். திட்டமிடுதலும் முயற்சியும் இன்று மிகவும் தேவை.

அமைதியாக இறைவழிபாட்டில் ஈடுபட்டு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். அதனால் வெற்றியும் நல்ல பெயரும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படாதீர்கள். நட்பாக அணுகி கலகலப்பாக பழகுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம். இன்று சிறந்த முறையில் பணத்தை கையாள இயலாது.

காய்ச்சல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம்.




இன்றைய நாளை உங்களின் சுய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

இன்று பணிகள் விருப்பமானதாக இருக்கும். என்றாலும் வெற்றி பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

நீங்கள் இன்று ஆரோக்கியமாக நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




உங்களிடம் போதிய தைரியம் காணப்படும். உங்கள் முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கும். பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியும் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் ஆற்றல் உங்களுக்கு தெரிய வரும் நாள் இது. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்யோன்யமாய் இருப்பீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடியாக காணப்படுவீர்கள்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை போன்ற கூடுதல் பணம் கிடைக்கும்.




நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள். என்றாலும் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். தொழில் சார்ந்த அணுகுமுறையால் பணிகளை சரிவர ஆற்ற இயலும்.

உங்கள் துணையிடம் உங்கள் கருத்துகளை வலியுறுத்துவீர்கள். நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் நலம்.

பண வரவும் செலவும் காணப்படுகின்றது. எதிர்காலத்துக்காகப் பணத்தை சேமிக்க வேண்டும்.

உங்கள் சொந்த வளர்ச்சி குறித்த மனக் குழப்பம் காரணமாக பதற்ற உணர்வுடன் காணப்படுவீர்கள்.

# முகாமைத்துவ சேவை சுப்ரா தர உத்தியோகத்தர்கள் மத்தியிலிருந்து மாகாணத்துக்கு வரலாம், போகலாம்!

## திருகோணமலை மேல் நீதிமன்றம் தீர்ப்பு!




**(இறக்காமம் நிருபர்)**

முகாமைத்துவ சேவை சுப்ரா தர உத்தியோகத்தர்கள் மத்திய அரசிலிருந்து மாகாண அரசுக்கு, யாரும் வரலாம் போகலாமென்று திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம் அப்துல்லாவினால் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு அமைவாக, ஏற்கனவே இடைக்கால தடையை மேக்நீதிமன்றம் வழங்கிய நிலையில் அவ்வழக்கு விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வந்தன.

இந்நிலைமையில் இந்த வழக்கு நேற்று எடுக்கப்பட்டபோது, அதற்கான இடைக்காலத் தடையை இரத்துச் செய்தமையுடன், முகாமைத்துவ சேவை சுப்ரா தர உத்தியோகத்தர்கள் மத்திய அரசிலிருந்து மாகாண அரசுக்கு, யாரும் வரலாம் போகலாமென்ற தீர்ப்பினையும் நீதிபதி என்.எம்.எம் அப்துல்லாஹ் வழங்கியுள்ளார்.

நிர்வாக உத்தியோகத்தர்கள் சார்பில் அரச சட்டத்தரணி இஸ்தேவனுடன் மாகாண சபை சார்பு சட்டத்தரணிகளான ஹபீலா அனஸ் மற்றும் றொஷிகா ஆகியோர் ஆஜராகி தொடர்ந்தும் வழக்காடி வந்தனர்.